கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 11வது விதை கருத்தரங்கு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதை மையம் சார்பாக, 11வது விதை கருத்தரங்கு 20.03.2025 அன்று விதை மையத்தில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில், 80-க்கும் மேற்பட்ட வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு 2025-26 ஆம் ஆண்டிற்கான விதை உற்பத்தி திட்டத்தை வரையரை செய்தார்கள். இந்த கருத்தரங்கில், விதை மைய இயக்குநர் முனைவர் ர. உமாராணி வரவேற்புரை நல்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வே. கீதாலட்சுமி அவர்கள் தனது, தலைமையுரையில் பல்கலைக்கழகத்தின் விதை உற்பத்தி விதை மையம் துவங்கிய பிறகு நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார். மேலும் அவர் பல்வேறு பயிர் இரகங்களின் விதை இருப்பு குறித்த விபரங்களை வழங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை இருப்பு வலைதளத்தை உருவாக்கியதற்காக வேளாண் பல்கலைக்கழகத்தின் விதை விஞ்ஞானிகளை பாராட்டினார். பல்வேறு பயிர் இரகங்களின் தரமான விதைகளை உரிய நேரத்தில் கொள்முதல் செய்வதற்கு விதை மையம் உருவாக்கியுள்ள இந்த வலைதளம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், தேசிய விதைக் கழகமும் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தரமான இடுபொருட்களான விதைகள், மரக்கன்றுகள், விதை பூச்சு கலவைகள், உயிர் உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டச்சத்துக்கள், பயிர் பூஸ்டர்கள் போன்றவைகள் தேசிய அளவில் விவசாயிகளுக்கு கிடைப்பதை மேம்படுத்த வழிவகுக்கும் என்று கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குநர் முனைவர் இரா. ரவிகேசவன், அவர்கள் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் சிறப்பியல்புகள், பயிர் உற்பத்தித்திறன் மற்றும் விதை மகசூலில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம், விதை விநியோகச் சங்கிலியில் கரு விதைகளின் இனத்தூய்மை பராமரிப்பு ஆகியவற்றின்

முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தேசிய விதைக் கழகத்தின் மண்டல மேலாளர் திரு. ஜெ. செல்வேந்திரன் அவர்கள் வேளாண் பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, வேளாண் பல்கலைக்கழகத்தின் விதை உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களையும் நாட்டின் பல்வேறு பகுதியில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்நிறுவனம் செயலாற்றும் என்று கூறுனார். தேசிய விதைக் கழகத்தின் முன்னாள் பொது மேலாளர் முனைவர் வி. சங்கரன், வேளாண் உற்பத்தியை உறுதி செய்வதில் ஆதார விதை மற்றும் சான்றுநிலை விதைகளின் பங்கை எடுத்துரைத்தார். மேலும் அவர் வேளாண் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பத்தை தேசிய விதைக் கழகத்தின் விதை உற்பத்தி பண்ணைகளில் பயன்படுத்துவதின் மூலம் விதை உற்பத்தியை மேம்படுத்த இயலும் என்று கூறினார். இறுதியாக, விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வே. மனோன்மணி நன்றியுரை கூறினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**